**23LAT404N / 23LAT004N / 23LAT404**

**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**BCom/ BBA/ BCA/ BVoc/ BSc & MSc(SS) DEGREE EXAMINATION DECEMBER 2025**
(Fourth Semester)

Common to - **BCom/ BBA/ BCA/ BVoc / BSc & MSc (SS) PROGRAMMES**

**TAMIL – IV**

Time: Three Hours　　　　Maximum: 75 Marks

பகுதி - அ (5 x 1 = 5)

ஒரு சொல்/ தொடரில் விடை தருக.

1. சிலப்பதிகாரம் - காட்சிக்காதையின் விழுமியம் யாது ?

2. ஞாலம் - பொருள் தருக.

3. ஐங்குறுநூற்றின் மருதத்திணைப் பாடல்களைப் பாடியவர் யார்?

4. எந்த ஆற்றின் நீர் பெண்கள் மணலில் எழுதிய பாவையைச் சிதைத்தது?

5. குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள துறை எது?

பகுதி - ஆ (8 x 5 = 40)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

6. அ) தேய்புரிப் பழங்கயிற்றை உவமையாகக் கொண்டு தலைவன் உரைத்தன யாவை?

(அல்லது)

ஆ) தலைமகனது ஆற்றாமையைக் கண்டு தோழி வரைவு கடாவிய செய்தியை மோசிகீரனார் எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்?

7. அ) கார்காலம் இல்லையாயின் 'இது கனவோ' என்று, தலைவி - பருவம் கண்டு வருந்தியதைக் குறிப்பிடுக.

(அல்லது)

ஆ) தலைவன் 'ஆடிப் பாவை போன்றவன்' - என்பதை ஆலங்குடி வங்கனார் பாடல் வழிப் புலப்படுத்துக.

8. அ) அகநானூற்றுப் பாடலில் குறுங்குடி மருதனார் குறிப்பிடும் தலைவனின் மனிதநேயப் பண்பை விவரிக்க.

(அல்லது)

ஆ) தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது என்ற துறையில் அமைந்த மதுரைத் தமிழ்க்கூத்தனார் கடுவன் மள்ளனாரின் பாடல் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.

**Cont…**

9. அ) தலைவி பிரிவாற்றாமையால் உரைத்தனவற்றைக் கலித்தொகைப் பாடல் வழி விளக்குக.

(அல்லது)

ஆ) வையைப் புனலின் வனப்பையும் புனலணி இன்பத்தையும் குறிப்பிடுக.

10. அ) சேரமான் கணைக்கால் இரும்பொறையின் தன்மான உணர்வை எழுதுக.

(அல்லது)

ஆ) சங்கத் தமிழரின் வீரத்தைக் காவற்பெண்டு பாடல் வழி எடுத்துரைக்க.

11. அ) மகளிர் தினைப் புனம் காவல் செய்ததைக் கபிலர் எங்ஙனம் குறிப்பிட்டுள்ளார்?

(அல்லது)

ஆ) மகளிர் சுனையில் நீராடியதைக் குறிஞ்சிப்பாட்டு வழி விவரிக்க.

12. அ) அகத்திணையின் இலக்கணம் கூறி, இருவகை கைகோள்களை விளக்குக.

(அல்லது)

ஆ) அன்பின் ஐந்திணைக்குரிய கருப்பொருட்களைப் பட்டியலிடுக.

13. அ) இறைச்சி என்றால் என்ன? சான்று காட்டி எழுதுக.

(அல்லது)

ஆ) மெய்ப்பாடுகளின் வகைகளைத் தெளிவுபடுத்துக.

பகுதி - இ (3 x 10 = 30)

அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.

14. அ) மனித உணர்வுகள் வெளிப்படுவதில் அமிக்டலாவின் பங்களிப்பை விளக்குக.

(அல்லது)

ஆ) அறிவுக்கும் உணர்வுக்குமான போராட்டத்தை 'டெண்டுல்கர் டெக்னாலஜி' கட்டுரை வழி விவரிக்க.

15. அ) 'தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும்' - என்ற மந்திரச் சொல்லைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) 'நீ எதுவாக மாற விரும்புகிறாயோ அதுவாக மாறுவாய்' என்ற மந்திரச் சொல்லுக்கும் அபிரகாம் லிங்கனுடைய வாழ்க்கைக்கும் இடையேயான தொடர்பைத் தெளிவுபடுத்துக.

16. அ) முச்சங்கங்களின் வரலாற்றை விரிவாக எழுதுக.

(அல்லது)

ஆ) சங்கப் பெண்பால் புலவர்களின் தமிழ்ப் பணியை விளக்குக.

Z-Z-Z END